செய்தி வெளியீடு எண்: 21　　　　　　　　　　நாள்: 08.01.2011

# நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் இந்த ஆண்டில் மேலும் 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதம் 1000 ரூபாய் நிதியுதவி!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கலை வளர்ச்சிக்குத் தொண்டு புரிவதையே தமது வாழ்வியல் கடமையாகக் கொண்டு வாழும் கலைஞர்கள், வயது முதுமை காரணமாகத் தொழில் வாய்ப்புகள் குறைந்து அல்லல்படும் சூழ்நிலையைப் போக்கிட நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், அளிக்கப்பட்டு வந்த நிதியுதவி மாதம் 500 ரூபாய் என்பதை, 2006க்குப் பின் மாதம் 1000 ரூபாய் என முதலமைச்சர் கலைஞர் உயர்த்தி வழங்கினார். அத்துடன், 2006 முதல் ஆண்டுக்கு 500 பேர் வீதம் கடந்த நான்காண்டுகளில் 2000 நலிந்த கலைஞர்களுக்குப் புதிதாக உதவித் தொகை வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, தற்போது இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 7 ஆயிரத்து 391 நலிந்த கலைஞர்கள் மாதம் 1000 ரூபாய் வீதம் நிதியுதவி பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில், 2010–2011 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை விவாத்தின்போது, தமிழக சட்டப்பேரவையில் நடப்பாண்டில் 500 நலிந்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களின் பெயர்ப்பட்டியலுக்கு ஒப்புதல் தந்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1.8.2010 முதல் மாதந்தோறும் 1000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (8.1.2011) ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் காரணமாக, நடப்பாண்டில் அரசுக்கு 40 இலட்ச ரூபாய் கூடுதலாகச் செலவாகும். தற்போது புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களையும் சேர்த்து, இத்திட்டத்தின்கீழ், மொத்தம் 7 ஆயிரத்து 891 பேர் பயனடைகின்றனர்.

---

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.